[2005 மார்ச் 28

5. கவன ஈர்ப்பு

சென்னை, தண்டையார்பேட்டையில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. பி.கே. சேகர்பாபு.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆர்.கே. நகர் தொகுதி, 7—வது வட்டம், தண்டையார்பேட்டையில் 110 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்க அனுமதி கிடைத்தும், இன்னும் பணி தொடங்கப்படாதது" குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 11—40

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்கள், ஆர்.கே. நகரில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிலத்தின் விலையை ரூபாய் 7.5 கோடி என நிர்ணயித்து, அதை துணை மின் நிலையம் அமைக்கத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்க தமிழக அரசிடமிருந்து ஒப்புதல் பெறுமாறு சிறப்பு ஆணையர், நில நிர்வாகம் அவர்களுக்கு எழுதியுள்ளார். இதனிடையில், துணை மின் நிலையம் அமைக்கக் குறைந்தபட்சம் 24,000 சதுர அடி நிலத்தை ரூ.2.39 கோடி விலையில் மின்சார வாரியத்திற்கு ஒதுக்குமாறு மாவட்ட ஆட்சியரிடம் மறு விண்ணப்பம் ஒன்று அனுப்பப்பட்டு உள்ளது. இந்த நிலையில், சிறப்பு ஆணையர், நில நிர்வாகம் அவர்கள் மேற்கண்ட நிலத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்க மாவட்ட ஆட்சியருக்குப் பரிந்துரை செய்துள்ளதோடு, பொதுப் பணித் துறை/மாநகராட்சியிடமிருந்து மறுப்பு இல்லாத சான்றிதழ் (என்.ஒ.சி.) பெற்றனுப்புமாறும் குறிப்பிட்டு உள்ளார். எனவே, நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும்.

2005 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்குத் தடையில்லா மின்சாரம், சீரான மின்சாரம் தந்திடும் மாண்புமிகு தமிழகத்தின் ஒளிவிளக்கு அம்மா அவர்கள் ஆர்.கே. நகர் தொகுதியில் 110 கிலோ வாட் துணை மின் நிலையத்தை அமைக்க ரூபாய் 23 கோடியே 16 இலட்சம் ஒதுக்கீடு செய்தமைக்கு அந்தப் பகுதி மக்களின் சார்பில் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துணை மின் நிலையம் அமைக்கத் தேவைப்படும் நிலத்திற்கு அரசு வழிகாட்டி மதிப்பு இரண்டு மடங்கு நில நிர்வாகத் துறை கேட்டதால் காலதாமதம் ஏற்படுவதாக அறிகின்றேன். இரயில்வே துறைக்குச் சென்னை மாநகரத்தில் இலவசமாக நிலத்தினை ஒதுக்கீடு செய்வதுபோல், ஒதுக்கீடு செய்ய முயற்சிக்கவோ அல்லது சலுகை விலையிலே வழங்கவோ அனுமதியை உடனடியாக வழங்கி அப்பணியைத் தொடங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சென்னைப் பெருநகரைப் பொறுத்த அளவிலே பெருநகரப் பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்வது மிகவும் கடினமாக உள்ளது. அப்படியே இடம் கிடைத்தாலும்கூட மின்சார வாரியம் ஒரு commercial நிறுவனம், வணிக நிறுவனம் என்ற கருத்தின் அடிப்படையில் இந்த நிலக் கிரயத்தை இரண்டு மடங்குக்கு மேல் அரசுத் துறை நிறுவனங்களே நிர்ணயிக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த ஆர்.கே. நகர் பகுதியினுடைய துணை மின் நிலையம் நிறுவுவதற்காக மின்சார வாரியம் ஏற்கெனவே மாண்புமிகு அம்மாவினுடைய உத்தரவின்பேரில் 20.38 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறது.

அதற்குரிய நிலத்தைத் தேர்வு செய்கின்றபோது கிராமப் புல எண் 3912/45,46,47,48,49 மற்றும் 50–ல் 75 ஆயிரத்து 67 சதுர அடி பரப்புள்ள நிலம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால், இந்த நிலத்திற்கு, இதன் விலையை இரண்டு மடங்காக நிர்ணயித்து, ஏறத்தாழ 7.5 கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால், இங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட தொகையோ 20.38 கோடி ரூபாய்தான். இதிலே 7.5 கோடி ரூபாய் நிலத்திற்குச் சென்றுவிட்டால், அந்தத் துணை

[திரு. இரா. விசுவநாதன்] [2005 மார்ச் 28

மின் நிலையம் அமைப்பதிலே சிக்கல் ஏற்படும் என்ற காரணத்தினால், அந்த நிலத்தில் மின்சார வாரியத்தைப் பொறுத்த அளவிலே, நிலம் கூடுதலாக இருப்பதால் 75 ஆயிரத்து 67 சதுர அடி தேவையில்லை; 24 ஆயிரம் சதுர அடியே போதுமானது என்று இப்பொழுது தன்னுடைய தேவையைக் குறைத்துக் கொண்டு, அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நிலம் ஒதுக்கித் தரும்படி இன்றைக்குக் கேட்டிருக்கிறது. 75 ஆயிரம் சதுர அடிக்கு 7.5 கோடி ரூபாய் என்றால், 24 ஆயிரம் சதுர அடிக்கு ஏறத்தாழ 2.5 கோடி ரூபாய்தான் செலவாகும் என்ற காரணத்தினால், அந்த நிலத்தை இப்போது மின்சார வாரியம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டிருக்கிறது. அந்த நிலத்தைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கை, தொடர் நடவடிக்கை இப்போது எடுக்கப்பட்டு வருகிறது. மிக விரைவிலே அந்த நிலத்தைக் கேட்டுப் பெற்று, அதற்குரிய தொகையும் வழங்கி, அந்தப் பகுதியிலே, ஆர்.கே. நகர்ப் பகுதியிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தபடி அந்தத் துணை மின் நிலையத்தை அரசு விரைவில் அமைக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் துறை எடுத்து வருகின்ற நடவடிக்கையை அறிவித்த அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ற அதேநேரத்தில் சென்னை மாநகரத்தில் பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் வியாபார ஸ்தலங்கள் போன்றவற்றிற்குக் கூடுதலாகத் தேவைப்படுகின்ற மின்சாரத் தேவைக்கேற்ப அம்மா அவர்கள் ஆட்சி மலர்ந்தபிறகு கடந்த 4 ஆண்டுகளில் 230 கிலோ வாட் மற்றும் 110 கிலோ வாட் மற்றும் 33 கிலோ வாட் துணை மின் நிலையங்கள் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இதுவரையில் எத்தனை அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை சட்டமன்றத்தில் நடைபெறவிருக்கின்ற மானியக் கோரிக்கையில், மின்சாரம் மற்றும் போக்குவரத்து மானியக் கோரிக்கையில் அதற்கான விரிவான பதில்களைத் தருகின்றேன் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.